என்ன தேவையோ அதைக் கண்டிப்பாக அரசு செய்து தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் கோயில், இராஜகோபுரம் புதுப்பித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள், முனைவர் கோவி. செழியன், அரசு தலைமைக் கொறடா மற்றும் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவர். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் கோயில் இராஜகோபுரத்தைப் புதுப்பிக்க வேண்டியது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்த விவர அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்களின் மேசையில் வைக்கப்பட்டுள்ள சிறு கணினியில் 'கவன ஈர்ப்பு' என்ற தலைப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 25] [திரு. பி.கே. சேகர்பாபு]

அறிக்கை

காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம் இணை ஆணையர் மண்டலத்திற்குட்பட்ட, சட்டப் பிரிவு 46 (iii)–ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட, பட்டியலைச் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிலை–I செயல் அலுவலராலும், காஞ்சிபுரம் உதவி ஆணையர் தக்கார் நிலையிலும் நிருவாகம் செய்யப்பட்டு வருகிறது.

இத்திருக்கோயிலின் மேற்கு இராஜகோபுரம் மிகவும் சிதலமடைந்ததைத் தொடர்ந்து, கடந்த 2006 ஆம் ஆண்டு கல்காரம் நீக்கி மேலே உள்ள பகுதி மட்டும் உபயதாரர்மூலம் திருப்பணி மேற்கொள்ளப்பட்டது. குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் முடிந்த நிலையில் முழுவதுமாகத் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்வதற்கு ஏதுவாக, காஞ்சிபுரம் மண்டல திருப்பணி வல்லுநர் குழுவில் 8–11–2021–ல் பரிசீலனைக்கு வைக்கப்பட்டது. இம்மண்டலக் குழுவை சார்ந்த வல்லுநர்களால் மேற்கு இராஜகோபுரத்தின் நிலை குறித்து நேரில் பார்வையிடப்பட்டு, கருத்துரு வழங்கப்படும் எனத் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

மேற்காணும் தீர்மானத்தின்படி, விரைவில் மண்டலக் குழு இத்திருக்கோயிலின் 4 ஆம் பிரகாரத்தில் அமைந்துள்ள சிதிலமடைந்த மேற்கு இராஜகோபுரத்தினை ஆய்வு செய்து அறிக்கை அளித்தவுடன், முழுவதுமாகத் திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. தற்போது இத்திருக்கோயிலின் மேற்கு இராஜகோபுரம் பக்தர்கள் பயன்பாட்டில் இல்லை. இத்திருக்கோயிலுக்குத் தெற்கு இராஜகோபுரம் வாசல் வழியாகவே பக்தர்கள் வந்து செல்கின்றனர். இதனால் பொதுமக்களுக்கு பதற்றம் ஏதும் ஏற்பட வழிவகை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில், வருகிற காலத்தில் கண்டிப்பாக அதற்கான திருப்பணி நடத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலும், இந்தக் கோயிலின் சிறப்பாக, முற்கால சோழர்கள் இக்கோயிலைக் கட்டமைத்ததற்கு அடையாளமாக கரிகால் வளவனுடைய சிலை அங்கே உள்ளது. கி.பி. 585 ஆம் ஆண்டு

[திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்] [2022 ஏப்ரல் 25

மகேந்திரவர்ம பல்லவனால் இத்திருக்கோயிலின் இடபேசுவரர் சன்னதி கட்டப்பட்டுள்ளது. கி.பி. 630–ல் யுவான்சுவாங் அவர்கள் இக்கோயிலுக்கு வருகைபுரிந்திருப்பது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கி.பி. 1120 ஆம் ஆண்டு முதலாம் குலோத்துங்க சோழன் அவர்கள் துர்கை சன்னதியை அமைத்திருக்கிறார். கி.பி. 1153 ஆம் ஆண்டு இரண்டாம் இராஜ இராஜ சோழன் அவர்கள் திருப்பணி செய்துள்ளார். கி.பி. 1215 ஆம் ஆண்டு மூன்றாம் குலோத்துங்க சோழன் அவர்கள் நூற்றுக்கால் மண்டபம் கட்டமைப்பு செய்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கிறது. சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: முடித்துவிடுகிறேன். இன்னும் இரண்டு மன்னர்கள்தான். அடுத்து, கடைசியாக இருக்கக்கூடிய மன்னர்களைக் கொண்டு வருவதற்காகச் சொல்கிறேன். கி.பி. 1380 ஆம் ஆண்டு விஜயநகர இரண்டாம் மன்னர் புக்கர் அவர்கள் நடராஜர் சன்னதி அமைத்திருக்கிறார். கி.பி. 1509 ஆம் ஆண்டு விஜயநகர மன்னர் கிருஷ்ணதேவராயர் தெற்கு இராஜகோபுரத்தை 192 அடியில் கட்டமைத்திருக்கிறார். நூற்றுக்கால் மண்டபம் என்று இருந்ததை ஆயிரங்கால் மண்டபமாக கட்டித் தந்திருக்கக்கூடிய நிலையில், 1900 ஆம் ஆண்டு தேவகோட்டை நகரத்தாரும் இந்தக் கோயிலில் திருப்பணி செய்திருக்கிறார்கள். இத்தனை சிறப்பு வாய்ந்த இந்தத் திருக்கோயிலின் மேற்கு இராஜகோபுரம் சிதிலமடைந்திருப்பதைச் சீரமைத்துத் தரவேண்டியதன் அவசியம் இருக்கிறது. ஏனென்றால் மக்கள் அங்கே செல்வது ஆபத்தாக அமையும் என்பதனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11—10

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், விவரங்களை அடுக்கினார். அது பஞ்சபூத ஸ்தலங்களிலே மண் ஸ்தலம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வார்கள் என்று நினைத்தேன். அது, 1,500 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. மேற்கு கோபுரம் 120 அடிகளைக் கொண்டது. அது சிதிலமடைந்து, பயன்பாட்டில் இல்லை. தெற்கு கோபுரம் என்பது

192 அடிகள் கொண்ட 6 நிலை கோபுரங்களைக் கொண்டது. அது மக்களின் பயன்பாட்டில் இருக்கின்றது. கடந்த ஆண்டு, 30-12-2021 அன்று நானும், மாவட்ட அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களும், மாவட்டச் செயலாளர் திரு. சுந்தர் அவர்களும் நேரடியாகச் சென்று கள ஆய்வு செய்தோம். அந்தக் கோபுரம் கட்டுவதற்குண்டான மண்டலக் குழுவினுடைய பரிந்துரை, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்கு வந்து தற்போது மாநிலக் குழு பரிந்துரைக்காக அனுப்பப்பட்டிருக்கின்றது. மாநிலக் குழு பரிந்துரையின் ஒப்புதல் கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய அந்தத் திருக்கோயில் கோபுரத்திற்குண்டான புனரமைப்புப் பணிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 100 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றார்கள். இந்தப் பணி, இந்த நிதியாண்டிலே எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவாரம் பாடிய சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் இத்திருக்கோயிலுக்கே வருகைபுரிந்து பாடியுள்ளதாக வரலாறு தெரிவிக்கிறது. மாணிக்கவாசகர் அவர்கள் கோயிலுக்கு வராமலேயே அங்கேயிருக்கக்கூடிய இறைவன் ஏகாம்பரரைப் போற்றி பாடல் பாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்தக் கோயில் இத்தனை சிறப்பு வாய்ந்ததாக இருக்கக்கூடியது. இது, 23.5 ஏக்கர் நிலப்பரப்பில், 5 பிரகாரங்களைக் கொண்டு சிறந்த கோயிலாக விளங்குகிறது. இங்கு, 1979 ஆம் ஆண்டும், 1992 ஆம் ஆண்டும், 2006 ஆம் ஆண்டும் திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. சற்றேறக்குறைய 16 ஆண்டுகளாக திருப்பணிகள் நடைபெறாமல் இருப்பதனால், 'கண்டிப்பாக இந்த இராஜகோபுரத்தை சீரமைப்பேன்' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு நான் நன்றி தெரிவித்தாலும், ஒட்டுமொத்தமாகத் திருப்பணிகளைச் செய்திட வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் முதலில் பேசியபோது சொன்னதைப்போல, பல்வேறு சிறந்த மன்னர்களெல்லாம் இந்தக் கோயிலைச் சீரமைத்துத் தந்திருக்கிறார்கள். இன்றைக்கு முதல்வர்களில் எல்லாம் சிறந்த

முதல்வர், தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) என்று உலகம் போற்றுகின்ற நம் முதல்வர் அவர்களின் காலத்தில் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலுக்குத் திருப்பணிகளை முழுமையாகச் செய்து தருவதற்கு இந்த நிதியாண்டிலேயே நிதி ஒதுக்கீடு செய்திட முன்வர வேண்டுமென்று கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நான்கு நாயன்மார்களால் பாடல் பெற்ற ஸ்தலம். அதில், ஆயிரங்கால் மண்டபம் என்பது முழுமையாகப் பூட்டப்பட்டிருந்தது. அந்த ஆயிரங்கால் மண்டபத்திலே விநாயகர் அருள்பாலித்திருக்கின்றார். நானும், நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களும் ஆய்வுக்குச் சென்றபோது, கிட்டத்தட்ட 8 ஆண்டுகளாகப் பூட்டப்பட்டிருந்த அந்த ஆயிரங்கால் மண்டபத்தை உடனடியாகத் திறந்து பக்தர்களின் பயன்பாட்டிற்கு வழங்கியிருக்கின்றோம். 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகம் என்பதால், அந்தத் திருக்கோயிலில் திருப்பணிகள் நடைபெற்று கும்பாபிஷேகம் நடத்துகின்றவகையில், அந்தத் திருப்பணிகளுக்குண்டான 16 பரிந்துரைகள் கடந்த 22-4-2022 அன்று மாநில தொல்லியல் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அதன் முழு விவரத்தையும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை மானியக் கோரிக்கை அன்று சொன்னால்தான் நன்றாக இருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன், வரலாற்றுச் சிறப்புமிக்க, 1,500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அந்தத் திருக்கோயிலை உள்ளூரிலிருந்தும், பிற மாவட்டங்களிலிருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும், பிற நாட்டவரும் வருகை தந்து தரிசனம் செய்கின்ற திருக்கோயில் என்பதால் முழுவதுமாகப் புனரமைத்து அதிக முக்கியத்துவம் கொடுத்து, அதற்கு வேண்டிய பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். கூடிய விரைவில் அதற்குண்டான பணிகள் நான்கு கால் பாய்ச்சலில் தொடங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.